**ஜூலை 12 - சர்வதேச மலலா தினம்**

- **புது தில்லியில் இந்திய தொல்லியல் ஆய்வு மையம் (ASI)** புதிய தலைமையகம் கட்டடம் - **தாரோகர் பவனை** பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்துவைத்தார்.
- **முதலமைச்சர் நிதீஷ் குமார்** தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம், **மது**பானங்கள் அருந்தினால் வீடு, நிலம் மற்றும் வாகனம் உட்பட சொத்துக்களை பறிமுதல் செய்யும் **கடுமையான விதிகளை ரத்து செய்ய ஒப்புதல்** அளித்தது.
- ஜூலை 23ம் தேதி நாட்டிற்கான **இந்திய இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் அண்ட் கன்ஸ்ட்ரக்சனை** (IIIC) முதலமைச்சர் பினராயி விஜயன் **கேரளா**விலுள்ள **சவாராவில்** திறந்து வைப்பார்.
- முதல் முறையாக, **ஒடிசாவில் பார்வை குறைபாடுள்ள நிர்வாக அதிகாரிகளுக்கு** தேவைப்படும் அனைத்து **சட்ட புத்தகங்களும் ப்ரெய்லி வடிவில்** அச்சிடப்பட்டு வருகின்றன.
- **யுனெஸ்கோவின் கீழ் உக்ரைன் மற்றும் போலந்தில்** நடைபெற்ற **பிரேவ் கிட்ஸ் சர்வதேச விழாவில்** "குழந்தைகள் மற்றும் அவர்களது நண்பர்கள் சர்வதேச இயக்கத்தில்" இந்திய மாணவர்கள் நமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினர்.
- **புதிய நேட்டோ பயிற்சி கமேண்ட்** மற்றும் **ஈராக்கில்** திறனை மேம்படுத்தும் பணியையும் **கனடா** ஏற்றுக்கொள்கிறது.

**உலக வங்கியின் 2017 தரவரிசையில் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா திகழ்கிறது**

**1) அமெரிக்க 2) சீனா 3) ஜப்பான் 4) ஜெர்மனி 5) இங்கிலாந்து 6) இந்தியா**

- MGNREGA மற்றும் வேளாண்மைக்கு இடையே ஒருங்கிணைப்பு தொடர்பாக **முதல் அமைச்சர்களின் துணை குழுவின் முதல் கூட்டம** நிதி ஆயோக்கில் நடைபெற்றது.
- புதுடில்லி விஞ்யான் பவனில் நடைபெற்ற 164 **வது மத்திய பொதுப்பணித் துறை தினம்** (CPWD) கொண்டாட்டத்தில் சுற்றுலா துறை அமைச்சர் உரையாற்றினார்.

- **டாக்டர் டி.சி.ஏ. ராகவன் -** டைரக்டர் ஜெனரல், முன்னாள் கவுன்சில் அலுவலக உறுப்பினர், உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சில் (ICWA).
- **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்** கழிவுநீர் சுத்திகரிப்புக்கு பொருத்தமான முறைகளை ஊக்குவிக்கவும் அதற்கான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் ஒரு தொழில்நுட்ப சவால் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மின்சார இழப்பை குறைப்பதற்கு மகாராஷ்டிரா அரசாங்கம் "**விவசாயிக்கு ஒரு மின்மாற்றி**" ஒதுக்கீடு செய்வதற்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தும்.
- 2018 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் தேதி பாதுகாப்புபடை சம்பள தொகுப்புக்காக **இந்திய இராணுவம் மற்றும் எஸ்.பி.ஐ. இடையே ஒப்பந்தம்** கையெழுத்தானது.
- அண்டை நாடுகளிலிருந்து வரும் குடிமக்களுக்கு விசா கட்டுப்பாடுகள் எளிதாக்க வேண்டி **வங்கதேசத்துடன் இந்தியா ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட திட்டம்.**
- முதன்முதலாக இந்திய கப்பல் INS **சுமித்ரா மலாக்கா நீரிணைக்கு அருகே சபாங் துறைமுகத்தில்** செயல்பட்டது.

## ரயில் பவனில் அழகுபடுத்தல் போட்டி

1) பால்ஹர்ஷா & சந்திராபூர் (மத்திய ரயில்வே)
2) மதுபாணி (கிழக்கு மத்திய ரயில்வே) மற்றும் மதுரை (தெற்கு ரயில்வே)
3) காந்திதம் (மேற்கு ரயில்வே), கோட்டா (மேற்கு மத்திய இரயில்வே) மற்றும் செகன்ட்ராபாத் (தெற்கு மத்திய ரயில்வே)

- ஜூலை 15ம் தேதி **மாஸ்கோவில்** நடைபெறும் FIFA **உலகக் கோப்பை இறுதிப் போட்டி**யில் **பிரான்ஸ் குரோஷியாவை** எதிர்கொள்ளும்.
- **பின்லாந்தில்** நடைபெறும் **20 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச தடகளப் போட்டியில்** 400 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்று, ஒரு சரித்திர சாதனையைப் படைத்திருக்கிறார் **அஸ்ஸாமைச் சேர்ந்த ஹிமாதாஸ்.**